# பி.ஜி.பி., துணை மருத்துவ கல்லூரியில் முதலாண்டு மாணவர் வரவேற்பு நிகழ்ச்சி

**நாமக்கல், ஜூன் 12**

நாமக்கல், பி.ஜி.பி., துணை மருத்துவ கல்லூரியில், தலைவர் ஜி பழனி பெரியசாமி, துணைத்தலைவர் விசாலாட்சி பெரியசாமி மற்றும் டீன் டாக்டர் பெரியசாமி ஆகியோரின் வழிகாட்டுதல்படி, முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் டாக்டர் நாகசிந்துஜா, குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். தாளாளர் கணபதி, மாணவர்கள் தங்கள் கல்வி பயணத்தை அர்ப்பணிப்பு, ஒழுக்கம் மற்றும் சேவை மனப்பான்மையுடன் தொடர ஊக்குவிக்கும் வகையில் பேசினார்.

பி.ஜி.பி., குழுமத்தின் கீழ் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களின் முதல்வர்களும், இந்த கொண்டாட்டத்தில் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மூத்த மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட துடிப்பான கலாசார நிகழ்ச்சிகள், திறமை வெளிப்பாடுகள், கலந்துரையாடல் அமர்வுகள் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சி, புதியவர்களுக்கு மகிழ்ச்சியான மற்றும் வரவேற்கத்தக்க சூழலை உருவாக்கியது. புதிய மாணவர்கள், கொண்டாட்டங்களில் ஆர்வத்துடன் பங்கேற்று, இந்த நிறுவனத்தில் தங்கள் கல்வி பயணத்தை தொடங்குவது குறித்த உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.



நமக்கல், பி.ஜி.பி., துணை மருத்துவ கல்லூரியில், முதலாமாண்டு மாணவர்கள் வரவேற்பு நிகழ்ச்சியில், கல்லூரி முதல்வர் டாக்டர் நாகசிந்துஜா, குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

# மேய்ச்சல் நில

**சேந்தமங்கலம், ஜூன் 12**

கோடைகாலம் முடிந்
வெயில் சுட்டேரித்து வ
வதால், காந்திபுரம் பொ
மசமுத்திரம் ஏரி முற்றிலு
வறண்டு மேய்ச்சல் நிலமா
மாறியுள்ளது.

நாமக்கல் மாவட்டம், சே
தமங்கலம் அடுத்துள்ள கா
புரம் மற்றும் பொம்மசமுத்தி
பகுதிகளில் அமைந்துள்ள ஏ
இப்பகுதி விவசாயத்தின் மு
கிய நீர் ஆதாரமாக உள்ள
இப்பகுதி மக்களின் பயன்பா
டிற்கும், நிலத்தடி நீர் ஆ
ரத்தை பெருக்குவதற்கு
இந்த ஏரி பெரிதும் உதவுகிற
கொல்லிமலையில் கன ம